### நாகர்கோவிலை அடுத்து

# தூத்துக்குடியிலும் ஒரு 'லாக்அப்' மரணம்!

## இளைஞரை அடித்துக் கொன்று போலீஸ் அராஜகம்!

தூத்துக்குடி, ஜூலை 25 -

தூத்துக்குடியில் மேலும் ஒரு லாக்அப் மரணம் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்ட இளைஞர் மர்ம மரணம் போலீஸார் அடித்துக் கொன்றுவிட்டதாக உறவினர்கள் குற்றச்சாட்டு இளைஞரின் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம்

தூத்துக்குடியில் விசாரணைக்கு அழைத்துச் சென்ற இளைஞர் மர்மமான முறையில் உயிரிழந்தார். காவல்துறையினர் அவரை அடித்துக்கொலை செய்துவிட்டதாகக்கூறி உறவினர்கள் உடலை வாங்க மறுத்து போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்.

தூத்துக்குடி அமுதா நகர் பகுதியைச் சேர்ந்த நாகராஜனின் மகன் அருணாச்சலம், அரசு மதுபான கடை பாரில் வேலை பார்த்து வந்தார். கடந்த 17ஆம் தேதி மதுபான கடை மூடிய பின்பு சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்ததாக தென்பாகம் காவல்துறையினர் அருணாசலத்தை கைது செய்து, விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அடுத்த நாள் அருணாச்சலம் உடலில் பலத்த காயங்களுடன் தூத்துக்குடி அரசு மருத்து கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக காவல்துறையினர் சேர்த்துள்ளனர்.

இதுதொடர்பாக அவரது குடும்பத்தினரிடம் போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். இதனிடையே, சிறையில் போலீசார் தாக்கியதால் தலையில் காயம் ஏற்பட்டதாக, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அருணாச்சலம் கடைசி வாக்கு மூலம் அளித்துள்ளார்.

தனது மகனை போலீசார் அடித்துக் கொன்றுவிட்டதாக தாய் குற்றச்சாட்டு இளைஞரின் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம் நான்கு நாட்களாக சிகிச்சை பெற்று வந்த அருணாசலம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். காவல்துறையினர் அடித்ததால்தான் தனது மகன் உயிரிழந்ததாக கூறி அவரது பெற்றோர் உடலை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**அருணாச்சலம் குடும்பத்திற்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்த கீதாஜீவன்!**

உயிரிழந்த அருணாச்சலம் குடும்பத்திற்கு தி.மு.க. உறுதுணையாக இருக்கும் - கீதாஜீவன் இதனிடையே, பெற்றோரின் அனுமதி இன்றி அருணாச்சலத்தின் உடல் பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனையறிந்து மருத்துவமனைக்கு சென்ற, முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்து இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்தார். அருணாச்சலத்தை தாக்கிய காவல்துறையின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்வரை, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தி.மு.க. உறுதுணையாக இருக்கும் என தெரிவித்தார்.

### இன்றைய நாள்

# தமிழ்நாட்டில் 'அரசு' என்ற ஒன்று உள்ளதா?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, ஜூலை 25 -

**"தூத்துக்குடியில் ஒரு இளைஞர் காவல்துறையினரின் சித்ரவதைக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். இந்நிலையில் முதல்வர் உள்ளிட்ட அமைச்சர்களும், அதிகாரிகளும் சினிமா பார்க்கச் சென்றுவிட்டனர். இன்றைய நாளில் தமிழ்நாட்டில் 'அரசு' என்ற ஒன்று உள்ளதா? என்பதே சந்தேகம்தான் என்று கழகத் துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**நாகர்கோவிலைத் தொடர்ந்து தூத்துக்குடியிலும் காவல்துறையின் சித்திரவதைக்கு உள்ளாகி இளைஞர் ஒருவர் உயிரிழந்திருக்கும் செய்தி வேதனை யளிக்கிறது.**

**காவல்துறைக்குப் பொறுப்பு (?) வகிக்கும் முதலமைச்சர் விஜய் அவர்கள் உட்படப் பல அமைச்சர்களும் அதிகாரிகளும் திரைப் படம் பார்க்க விடுப்பில் சென்றுள்ளதால், இன்றைய நாள் தமிழ்நாட்டில் 'அரசு' என்ற ஒன்று உள்ளதா என்பதே சந்தேகம் தான்!**

**நாளை பணிக்குத் திரும்பிய பின்னாவது, இந்த காவல் மரணம் குறித்து வாய் திறக்கிறார்களா என்று பார்ப்போம்.**

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

# இ-20 பெட்ரோல் பயன்பாட்டால் வாகனங்களுக்கு கடும் சேதமா?

## மக்களவையில் - டி.ஆர்.பாலு எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 25-

20 சதவிகிதம் அளவுக்கு எத்தனால் (ஆல்கஹால் ) கலந்த பெட்ரோல் பயன்படுத்தப் பட்ட கார் உள்ளிட்ட வாகனங்கள் கடுமையான சேதத்துக்கு ஆளாகி உள்ளது என்ற வாகன உரிமையாளர்கள் கூறும் அதிருப்தி குற்றச்சாட்டு பற்றி அரசு அறிந்துள்ளதா? அப்படியானால் அதனை சரி செய்ய எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் திமுக மக்களவைக் குழுத்தலைவரும் கழகப் பொருளாளரும் ஆன டி ஆர் பாலு அவர்கள் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்காரி அவர்கள் விரிவான பதிலை மக்களவையில் அளித்தார்.

அமைச்சர் நிதின் கட்காரி பதில் வருமாறு:

இந்திய ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்த தகவல்படி இ-20 பெட்ரோல் பயன்பாடு காரணமாக வாகனங்களுக்கு பெரிய சேதங்கள் ஏற்படவில்லை. ஆனால், கார் எஞ்சின் செயல்பாடு, மைலேஜ் குறைவு , தேய்மானம் போன்ற அம்சங்களில் ஏற்பட்ட சில குறைகள் மற்றும் தொந்தரவு தொடர்பாக புகார்கள் வந்துள்ளன. சமூக வலைதளங்களில் இந்தக் குறைபாடுகள் பற்றி பெரிய அளவில் குற்றச் சாட்டுகள் பரப்பப் படுகிறது.

ஆல்கஹால் - பெட்ரோல் கலவைத் திட்டம் பெட்ரோலிய அமைச்சகத்தால் பலகட்ட கள ஆய்வுகள், அறிவியல் சோதனைகள், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அக்கறை கொண்டுள்ள பங்குதாரர்களுடனான ஆலோசனைகளுக்குப் பிறகே அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக இ20 பெட்ரோல் பயன்பாடு கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் மீது எத்தகைய பாதிப்புகளையும் தாக்கத்தையும் தரும் என்பதால் ஐ.ஓ.சி, இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் பெட்ரோலியம், அசோசியேஷன் ஆஃப் ஆட்டோமோடிவ் ரிசர்ச், சொசைட்டி ஆஃப் இந்தியன் ஆட்டோமொபைல் மேனுபேக்சரர்ஸ் ஆகிய அமைப்புகள் இணைந்து விரிவான ஆய்வுகள் செய்தன. அதன்படி இ20 எரிபொருள் பி.எஸ்.3,பி.எஸ்5,பி.எஸ்6 தரச் சான்று பெற்ற கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்களில் பயன் படுத்த ஏற்றது என உறுதி செய்ய பட்டது. ஆனால், 2016க்கு முன் தயாரிக்கப்பட்ட பி.ஈஸ்3 வாகனங்களில் உள்ள ரப்பர் பாகங்கள் சற்று சேதாரம் ஆகும் வாய்ப்பு உள்ளது. ஆனால் அவ்வப்போது வாகனங்களில்மேற்கொள்ளப் படும் சர்வீஸின் போது எளிதில் மாற்றத்தக்கவை தான்.

ஆல்கஹால் கலந்த பெட்ரோல் அறிமுகம் தொடர்பான திட்டம் 2001 முதல் துவக்க ப்பட்டது. எனினும், தொடர் முயற்சிகட்கு பிறகு 2013-14ஆம் ஆண்டில் 1.53 சதவீதம் ஆல்கஹால் கலந்த பெட்ரோல் அறிமுகம் ஆனது. பின்னர் , 2021ல் 8.1 சதவீதம், 2022 ல் 10 சதவீதம், 2023 ல் 12 சதவீதம் ஆல்கஹால் கலந்த பெட்ரோல் அறிமுகம் ஆனது. தொடர்ந்து சென்ற மூன்றரை ஆண்டுகளாக 16. சதவீதம் கலந்த பெட்ரோல் வினியோகிக்க படுகிறது. 2025 நவம்பர்/ 2026 ஜூன் முதல் இ20 பெட்ரோல் அமலில் உள்ளது.

பிரேசில் உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளிலும் இதைவிட அதிக அளவு எத்தனால் கலந்த பெட்ரோல் நீண்ட காலமாக வாகன எரிபொருளாகப் பயன்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் நிதின் கட்காரி அவர்கள் இவ்வாறு தனது பதிலில் தெரிவித்தார்.

### எத்தனால் கலந்த பெட்ரோலால்

# வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தடுக்க ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 25-

எத்தனால் கலந்த பெட்ரோலால், வாகனங்கள் மற்றும் நுகர்வோருக்கு ஏற்படும் பாதிப்பை சரிசெய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் எத்தனால் கலப்பு அளவை விரிவுபடுத்துவதற்கு முன்பு, வாகன உற்பத்தியாளர்கள், எரிபொருள் விற்பனையாளர்கள், நுகர்வோர் அமைப்புகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டதா? என்றும் ஒன்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் வருமாறு:

E20 உட்பட எத்தனால் கலந்த பெட்ரோலின் பயன்பாட்டை ஒன்றிய அரசு கட்டாயமாக்கி அதனை படிப்படியாக அதிகரித்து வருகிறதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன? மேலும் E30 அல்லது E85 போன்ற அதிக எத்தனால் கலப்பு கொண்ட பெட்ரோலை அறிமுகப்படுத்தும் திட்டமிருந்தால் அதன் விவரங்கள் என்ன? தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள எத்தனால் கலப்பு சதவீதம் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் ஆண்டுவாரியாக எட்டப்பட்ட சராசரி எத்தனால் கலப்பு சதவீதம் என்ன?

எத்தனால் கலந்த பெட்ரோலினால் வாகன செயல் திறன் மற்றும் இயந்திரங்களின் நீடித்த தன்மை ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்பு குறித்து, குறிப்பாக E20க்கு முந்தைய மற்றும் E20உடன் பொருந்தாத பிற வாகனங்களில், தொழில்நுட்ப ரீதியான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா? ஆய்வு நடந்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

எத்தனால் கலந்த பெட்ரோலின் பயன்பாட்டினால் என்ஜின் சேதம் அல்லது பிற இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டதாக அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளனவா? அவ்வாறெனில் மாநில வாரியாக பெறப்பட்ட புகார்கள், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

எத்தனால் கலப்பு அளவை விரிவுபடுத்துவதற்கு முன்பு, வாகன உற்பத்தியாளர்கள், எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் (OMCs), எரிபொருள் விற்பனையாளர்கள், நுகர்வோர் அமைப்புகள் மற்றும் மாநிலஅரசுகளுடன் வாகனப் பொருந்தக்கூடிய தன்மை, எரிபொருள் தர நிலை மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பாக அரசு ஆலோசனைகள் நடத்தி, வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தால் அதன் விவரங்கள் என்ன?

எத்தனால் கலந்த பெட்ரோலுக்கான தரநிலைகள், தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகள், நுகர்வோருக்கான வழிகாட்டுதல்கள், வாகனப் பொருந்தக்கூடிய தன்மை, பராமரிப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான விதிமுறைகள் குறித்து அரசு ஏதேனும் வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளதா? மேலும் எரிபொருள் சேர்க்கைகள் அல்லது செயல்திறன் மேம்படுத்திகளைப் பயன்படுத்த அனுமதித்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

எத்தனால் கலப்பு விரிவாக்கத்தால் வாகன உரிமையாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய, பழைய வாகனங்களுக்காக E10 மற்றும் E20 ஆகிய இருவகை பெட்ரோல்களையும் தொடர்ந்து கிடைக்கச் செய்தல், எரிபொருள் தரத்தை உறுதி செய்தல், வாகனப் பொருந்தக்கூடிய சான்றிதழ் வழங்குதல், எத்தனாலுக்கு இணக்கமாகும் வாகனங்களை ஊக்குவித்தல் மற்றும் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து நுகர்வோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தால் அதன் விவரங்கள் என்ன?

எரிபொருள் தரக் குறைபாடுகள் அல்லது எத்தனால் கலந்த பெட்ரோலின் பயன்பாட்டினால் வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டால், அதற்கான குறைதீர்ப்பு மற்றும் இழப்பீட்டு நடைமுறைகள் ஏதேனும் உள்ளனவா? மேலும் எத்தனால் கலப்பு இலக்குகளை செயல்படுத்தும் நிலையில்கூட பெட்ரோல் விலைகள் நுகர்வோரை பாதிக்காமல் இருக்க எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

இவ்வாறு தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

### பொருளாதாரக் குழுமத் திட்டத்திலிருந்து விலகி நிற்கும்

# ஒன்றிய அரசிடம் ஈரோடு மாவட்ட வளர்ச்சி குறித்த கேள்விக்கு பதில் இல்லை!

## மக்களவையில் – கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஜூலை 25-

வாக்குறுதியளிக்கப்பட்ட பொருளாதாரக் குழுமத் திட்டத்திலிருந்து விலகி நிற்கும் ஒன்றிய அரசிடம் ஈரோட்டின் வளர்ச்சி குறித்த கேள்விகளுக்கு பதில் இல்லை என கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டியுள்ளார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ், ஒன்றிய அரசின் பொருளாதாரக் குழும (Economic Cluster) மேம்பாட்டு முயற்சிகளின் கீழ் கோயம்புத்தூர்-ஈரோடு-திருப்பூர் நகரப் பொருளாதாரப் பிராந்தியத்தின் (City Economic Region - CER) தற்போதைய நிலை குறித்து ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சரிடம் விளக்கம் கோரினார்.

மேலும், அந்தப் பிராந்தியத்திற்காக பரிசீலனையில் உள்ள, ஒப்புதல் அளிக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட அல்லது நிதி ஒதுக்கப்பட்ட திட்டங்கள், பொதுத்-தனியார் கூட்டாண்மை (PPP) அடிப்படையிலான சீர்திருத்தம் மற்றும் முடிவுகள் சார்ந்த நிதியுதவி அமைப்பு, ஈரோடு தொழில் துறை மண்டலத்திற்காக முன்மொழியப்பட்ட தளவாட வசதிகள், தொழில்துறை இணைப்பு, சரக்கு போக்குவரத்து, ஏற்றுமதியை ஆதரிக்கும் பொருளாதார உள்கட்டமைப்பு மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்கள் குறித்த விவரங்களையும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூரில் செயல்படும் ஜவுளி, பொறியியல், வேளாண் பதப்படுத்தல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் (MSME) துறைகளின் போட்டித்திறனை மேம்படுத்தும் வகையில், நகரப் பொருளாதாரப் பிராந்திய (CER) திட்டத்தில் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு வசதிகள் இடம்பெற்றுள்ளனவா என்பதையும், ஒப்புதல் பெற்ற திட்டங்கள் எப்போது நிறைவேற்றப்படும் மற்றும் முன்மொழியப்பட்ட நிதி மற்றும் உள்கட்டமைப்பு அமைப்புகள் எப்போது செயல்பாட்டுக்கு வரும் என்பதற்கான காலக்கெடுவையும் விளக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு:

(அ) குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் - குழும மேம்பாட்டுத் திட்டம் (MSE-CDP) என்பது, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் போட்டித்திறனை மேம்படுத்தும் நோக்கில் பொதுப் பயன்பாட்டு மையங்கள் (Common Facility Centres - CFCs) மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கும் தேவையடிப்படையிலான ஒன்றியத் திட்டம் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. இருப்பினும், இந்தத் திட்டத்தில் கோயம்புத்தூர்-ஈரோடு-திருப்பூர் நகரப் பொருளாதாரப் பிராந்தியம் (CER) தொடர்பாக தனிப்பட்ட எந்தவொரு கூறும் இடம்பெறவில்லை என்றும் விளக்கியுள்ளது.

(ஆ) MSE-CDP திட்டத்தில் பொதுத்-தனியார் கூட்டாண்மை (PPP) அடிப்படையிலான சீர்திருத்தம் மற்றும் முடிவுகள் சார்ந்த நிதியுதவி தொடர்பான எந்தவொரு ஏற்பாடும் இல்லை என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.




திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி நகர தி.மு.கழக அலுவலகத்தில் தாராபுரம் நகர கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடிக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# பொன். கலியமூர்த்தி

### ஜூலை 25 (2011)



**பூதலூர் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.**

**தஞ்சை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**பூதலூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநர், தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்புகளையும் திறம்பட வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**